**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 8/2023**
**2024ம் வருடம் அக்டோபர் மாதம் 23ம் நாள் புதன்கிழமை**

எ.ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு.சி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| பெயர் | **முத்துராஜா** | த/பெ | **முருகன்** |
|---|---|---|---|
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:-**

நான் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல வட்டார போக்குவரத்து ஆய்வாளருக்கு சம்மன் வந்ததன் பேரில் நான் அவரது உத்திரவின் பேரில் ஆஜராகியுள்ளேன். அந்த உத்திரவு சா.சா.ஆ.1. மலைச்செல்வி என்பவரது ஓட்டுநர் உரிமம் பதிவு உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகும். மேற்படி மலைச்செல்வி என்பவருக்கு 16.02.2023 முதல் 15.02.2033 வரை ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து தேதியான 19.11.2022 தேதியில் மேற்படி மலைச்செல்விக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.3.

**குறுக்கு விசாரணை:-**

பொதுவாக ஒருவரின் பெயர் மற்றும் பிறந்த தேதியை வைத்து தான் ஒருவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா, இல்லையா என பார்க்க முடியும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்திற்கு வந்த

சம்மனில் மலைச்செல்வி என்பவரது பிறந்த தேதி குறிப்பிடப்படவில்லை. எங்கள் அலுவலகத்தில் உள்ள கோப்புகளின் அடிப்படையில் மட்டும் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து நடந்த தேதியில் மேற்படி மலைச்செல்விக்கு வேறு முகவரியில் வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.3 ஆய்வறிக்கையில் மலைச்செல்வி என்பவரது ஓட்டுநர் உரிமம் ஆய்வின் போது தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் மேற்படி மலைச்செல்விக்கு ஓட்டுநர் உரிம்ம இல்லை என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை